# கர்த்தரின் நாமம் பலத்த துருகம்

## வியாக்கியானம்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

## நீதிமொழிகள் 18:10

10. கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்.



இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

ஆனால் ஒரு மறைவிடம் உண்டு.
“கர்த்தரின் நாமம் பலத்த
துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச்
சுகமாயிருப்பான்.”



# செய்தி: 57-0407M —தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்கிறார்

53 இந்த உலகத்தினுடைய யுகத்தின் முடிவான நேரத்தில் நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்.

காணக்கூடிய எவரும், தினசரி பத்திரிக் கையை எடுத்துப் பார்க்கிற எவரும் எப்படி மனந்திரும்பாதிருக்கிறார்கள் என்று என்னால்—என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. என்னால் அதை புரிந்து கொள்ள முடியவில்லை.

சம்பவிக்க காத்துக் கொண்டிருக்கின்ற ஏதோ மகத்தான காரியத்தின் சாயங்கால வேளையில் நாம் எப்படியாய் இருக்கி றோம்.

இயற்கையும் கூட அதை காட்டுகிறது. உலகமானது அஞ்சி நடுங்கிக் கொண்டு வருகிறது. அதனுடைய அக்கினி குழம்பு களை அது வெளியே தள்ளிக் கொண் டிருக்கிறது. அது பயங்கரமான பலவீனத்தை உடையதாய் இருக்கிறது.

பெரிய பூமியதிர்ச்சிகள் அசைத்துக் கொண்டும், வீதிகளைப் பிளந்து கொண் டும் இருக்கின்றன.

பயங்கரமான காட்சிகளான பறக்கும் தட்டுகளும், பூமியினூடாக அவர்கள் ஏவக்கூடிய ஏவுகணைகள் அழிக்கவும், ஐந்தே நிமிடங்களில் ஒரு தேசத்தை நிர்மூலமாக்குவதாகவும் இருக்கின்றன.

நாம் கடைசி நேரத்தில் இருக்கிறோம். ஏதோ காரியம் சம்பவித்துக் கொண்டிருக் கின்றது...அதை தடுத்து நிறுத்த ஏதும் வழி கிடையாது. ஒரு வழியும் இல்லை.

அதிலிருந்து வெளியே வர ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது மேலே உள்ளது. ஒளிந்து கொள்ள முயற்சிப்பதற்கு ஏதும் வழியேயில்லை. ஒன்றைத் தவிர மறைவிடமே கிடையாது.

54 சிறுபெண்கள் வழக்கமாக இங்கே பாடுவது போன்றே, நான் சரியாக ஒரு பிரசங்கிக்கின்ற பையனாய் இருந்த பொழுது அவர்கள் இவ்விதமாய் பாடுவார் கள்.

இங்கே கீழே மறைவிடம் ஏதும் இல்லை;

என் முகத்தை மறைத்துக் கொள்ள நான் பாறைகளண்டை சென்றேன், ஆனால் அந்த பாறைகளே சத்தமிட்டன...

இங்கே கீழே மறைவிடம் ஏதுமில்லை.

55 ஆனால் ஒரு மறைவிடம் உண்டு. “கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்.”

கடைசி நேரத்தில் இந்த மறைவிடம் இருப்பதற்காக நாம் எவ்வளவு சந்தோஷ மாய் இருக்க வேண்டும்.



# அந்த புகலிடத்துக்குள் இருக்கும் வரைக்கும் நீங்கள் பாதுகாப்பாய் இருப்பீர்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-0513E அழுத்தத்தை வெளியேற்றுதல்

41. அடைக்கலப் பட்டணத்தில் தங்க விருப்பமுள்ள எவனும் குறை கூறிக் கொண்டிருக்க முடியாது. அவன் அங்கு தங்க வேண்டுமென்றால் குறைகூறக் கூடாது. அதற்கு வெளியே அவன் மரித்து விடுவான், உள்ளே பாதுகாப்பாயிருப் பான். இங்குள்ள கிறிஸ்தவர் அல்லாத வர்க்கு ஒன்று கூற விரும்புகிறேன். முப்பத்தொன்று ஆண்டுகளுக்கு முன்பு நான் இந்த அடைக்கலப்பட்டணத்துக்குள் பிரவேசித்தேன். சகோதரனே, அங்கிருந்து வெளியே செல்ல நான் விரும்பின தேயில்லை. ஓ, நான் கிறிஸ்துவுக்குள் வந்துவிட்டேன். நான் வாஞ்சித்த அனைத் தும் இங்குள்ளது. எனக்கு வெளியே

செல்லப் பிரியமில்லை. "ஓ தேவனே, இங்கு நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக் கிறேன். இங்கேயே நான் தங்கியிருக்க அனுமதியும்" என்று நாள்தோறும் ஜெபிக் கிறேன். எனக்கு இங்கிருந்து செல்லப் பிரியமேயில்லை. அவர் என்னை ஒருக் காலும் விட்டு விலகமாட்டார் என்று அறிந்திருக்கிறேன். அவர் உங்களையும் விட்டு விலகமாட்டார். அழுத்தம் அதிகரிக் கும் பட்சத்தில், அவரே நமக்கு வெளி யேற்றும் குழாயாக (outlet) அமைந்திருக் கிறார். எனவே அதைக் குறித்து நாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. நீங்கள் எல்லாம் அழுத்தமுள்ளவர்களாகி, எங்கு செல்கின்றீர்கள் என்றும், மரணத் துக்குப் பிறகு உங்களுக்கு என்ன நேரிடுமென்றும் அறியாதிருந்தால், நீங்கள் எப்பொழுதாவது மரிக்க வேண்டுமென்று அறிந்திருக்கிறீர்கள், அது எப்படியும்

நடக்க வேண்டும். நீங்கள் செய்ய வேண்டியது என்னவெனில், அடைக்கலமாகிய கிறிஸ்துவினிடம் வந்து, அழுத்தத்தை வெளியேற்றுவதே. அதை ஒரேயடியாக முடித்து தீர்த்துவிடுங்கள்.

42. என்ன நடந்த போதிலும், கிறிஸ்துவே நமக்கு அடைக்கலம். அவரிடம் நாம் வருவோமானால், அழுத்தத்தை நாம் வெளியேற்றி விட முடியும். “நான் மரித்து போனால், எனக்கு என்ன நேரிடும்? என் மனைவியின் கதி என்ன? என் கணவரின் கதி என்ன? என் பிள்ளைகளின் கதி என்ன?” என்றெல்லாம் கவலைப்படுவதை நீங்கள் விட்டுவிலகலாம். நீங்கள் கிறிஸ்துவினிடம் வந்து அழுத்தத்தை வெளியேற்றுங்கள். அவர் எல்லாவற்றையும் நமக்குத் தருகிறார். கிறிஸ்துவின் மூலம் எல்லாமே நமக்குச்

சொந்தம். எனவே, அழுத்தத்தை வெளி யேற்றுங்கள். அதை நீங்கள் செய்யக் கூடிய ஒரே வழி... யாராவது உங்களுக்கு பத்து லட்சம் டாலர்கள் கொடுக்கக் கூடும்; அது அழுத்தத்தை அதிகரிக்கிறது. நீங்கள் ஒரு சபையை சேரலாம்; அது அப்பொழுதும் அழுத்தத்தை அதிகரிக்கும். ''ஏனெனில் மெதோடிஸ்டுகள் அவர்கள் செய்வது தான் சரியென்றும் பாப்டிஸ்டுகள் தவறென்றும் சொல்வார்கள். பாப்டிஸ்டுகளோ, அவர்கள் தவறு, நாங்கள் செய்வது தான் சரி'' என்பார்கள். அது அதிக அழுத்தம் உண்டாக்குகிறது. ஏனெனில் நீங்கள் எங்கு நிற்கிறீர்கள் என்பதை அறியாமலிருப் பீர்கள். ஆனால் நீங்கள் எப்பொழுதாவது கிறிஸ்துவினிடம் வருவீர்களானால், அழுத்தத்தை வெளியேற்றலாம். ஏனெனில் அப்பொழுது அதெல்லாம் முடிந்துவிடும்; அதை தீர்த்துவிடுங்கள்.“

43. அது தேவனால் அருளப்பட்ட பாதுகாப்பு ஸ்தலம். “கர்த்தருடைய நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான் என்று தேவன் கூறி யுள்ளார். வியாதியாயுள்ள நேரத்தின் போது; வியாதி உங்களைத் தாக்கி, மருத் துவர், ”இதைக் குறித்து வேறொன்றும் என்னால் செய்ய முடியாது'' என்று கூறிவிட்டால், அழுத்தத்தை அதிகரித்துக் கொள்ளாதீர்கள்; அழுத்தத்தை வெளியேற் றுங்கள். உங்கள் (போதகரைக் கூப்பிடுங் கள். அவர் உங்களுக்கு எண்ணெய் பூசி ஜெபம் செய்யட்டும். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். அழுத்தத்தை வெளியேற்றுங் கள். பாருங்கள்? அவர் நமக்கு அடைக் கலம். நீங்கள் இந்த அடைக்கலத்துக்குள் இருக்கும்போது, உங்களுக்கு - இந்த அடைக்கலத்தில் உள்ள எதன் பேரிலும்

உங்களுக்கு உரிமையுண்டு. கிறிஸ்துவே நமக்கு அடைக்கலம். உங்களுக்குத் தேவை யான அனைத்தும் அவரில் உள்ளது. ஆமென்! வியாதியின் போது அழுத்தத்தை அதிகரித்துக் கொள்ளாதீர்கள். அழுத்தத்தை வெளியேற்றுங்கள்.

44. நீங்கள், நான் வியக்கிறேன், சகோ. பிரான்ஹாமே எனலாம். நீங்கள் வியக்கா தீர்கள்; அழுத்தத்தை வெளியேற்றிவிடுங் கள். உங்கள் விவகாரத்தை தேவனிடம் சமர்ப்பித்து விட்டு, எல்லாம் முடிந்து விட்டது என்பதுபோல் சென்று கொண் டிருங்கள். அழுத்தத்தை அதிகரித்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் தேவனிடம் சமர்ப்பிப்பது அழுத்தத்தை வெளியேற்றி விடும். நீங்கள், ''சகோ. பிரான்ஹாமே, எனக்கு கவலையாயுள்ளது. ''என்ன செய்வதென்றே...'' எனலாம். அழுத்தத்தை

வெளியேற்றுங்கள்! ஆமென்! அடைக்கலப் பட்டணத்தில் அவர் உங்கள் கவலையை எடுத்துப்போட்டார். எனவே நீங்கள், நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசிய மில்லை. அவர் உங்களை விசாரிக்கிறவ ரானபடியால், உங்கள் கவலைகளை யெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள் (1.பேது. 5:7). உங்கள் கவலைகளைக் குறித்து கவலைக் கொள்ளாதீர்கள்; அது அவருடைய வேலை.

45. சில ஆண்டுகளுக்கு முன்பு, ''பத்து சென்டுகள்'' அங்காடியில் ஒரு ஸ்திரீயை சந்தித்தேன். அவளுக்கு சுமார் அறுபது வயது இருக்கும், ஆனால் காண்பதற்கு முப்பது வயது போலிருந்தாள். "சகோ தரியே, உன்னால் எப்படி முடிந்தது? என்று கேட்டேன். அவள், "சகோ. பிரான்ஹாமே, என் இரண்டு மகன்கள் மருத்துவர்கள்.

அவர்கள் உங்களை விட மூத்தவர்கள்” என்றாள். உண்மையைக் கூறினால் அவள் காண்பதற்கு முப்பது வயதுக்கு அதிகமாக தோன்றவில்லை. அவள், “இதுதான் அதன் இரகசியம். எனக்கு பன்னிரண்டு வயதான போது நான் கிறிஸ்துவினிடம் வந்தேன்... நான் உட்கார்ந்து கொண்டு அதைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கலானேன். நான் மற்ற மார்க்கங்களையும் ஆராய்ந்து பார்த்தேன், ஆனால் நான் உண்மையான மார்க்கத்தைக் கண்டு கொண்ட போது... நான் கிறிஸ்து வினிடத்தில் வந்து, என் விவகாரம், என் எல்லாவற்றையும் அவரிடம் கொண்டு சென்றேன். அன்று முதல் நான் கவலைப் பட வேண்டிய அவசியம் இருக்கவே யில்லை. அவர் அதைச் செய்ய போதிய அளவுக்கு பெரியவராயிராமல் போனால், அதைச் செய்ய நான் போதிய அளவுக்கு பெரியவள் அல்ல. எனவே அதைக்

குறித்து நான் கவலைப்படுவதனால் என்ன பயன்?” என்றாள். பாருங்கள்? அதுதான்! உங்கள் கவலைகளை எல்லாம் தம் மேல் ஏற்றுக்கொள்வதாக கிறிஸ்து வாக்களித்துள்ளார். உங்கள் கவலைகளை அவர் மேல் வைத்துவிடுங்கள். எனவே நீங்கள் எதைக் குறித்து கவலை கொள்கிறீர்கள்? கவலை அழுத்தத்தை அதிகரிக்கும். அழுத்தம் வெடிக்கும்படி செய்யும். எனவே, உங்கள் கவலைகளை அவர் மேல் வைத்துவிட்டு, கவலைப்படுவதை விட்டு விலகுங்கள். சரி!

46. இப்பொழுது... அதை எப்படி செய்வது? என்று நீங்கள் கேட்கலாம். அவருடைய வாக்குத்தத்தை விசுவாசிக்க மாத்திரம் செய்யுங்கள். அவர் அதை செய்வதாக வாக்களித்துள்ளார் மரண நேரத்திலும் கூட மரண தூதன் அறைக்குள்

வரும்போது... ஓ, சகோ. பிரான்ஹாமே, நான் பயந்து போவேன். ஓ, இல்லை! நீங்கள் அடைக்கலத்துக்குள் இருக்கிறீர்கள். இல்லை, இல்லை! நீங்கள் மரிப்பீர்கள் என்று உங்களுக்குத் தெரியும்; எப்படி யாவது நீங்கள் சென்றே ஆக வேண்டும். எனவே அந்த புகலிடத்துக்குள் பிரவே சித்து பாதுகாப்பாயிருங்கள். அது உண்மை! அந்த புகலிடத்துக்குள் இருக்கும் வரைக்கும் நீங்கள் பாதுகாப்பாய் இருப் பீர்கள். அவர் உங்களுக்காக மரித்தார் என்பதை நினைவு கூருங்கள். அவர் உங்கள் மேல் கவலை கொள்கிறார். அவர் உங்களுக்காக மரித்தார். இப்பொழுது, நாம் பார்ப்போம்.... நீங்கள், “சகோ. பிரான்ஹாமே, மரண தூதன் கதவைத் தட்டும் போது கூட நாம் பயப்படக் கூடாது என்றா சொல்கிறீர்கள்? சிறிதளவும் பயப்பட வேண்டியதில்லை. ஏன்

அப்படி...? புகலிடத்துக்கு வாருங்கள்; அவ்வளவுதான்!

47. நீங்கள், சகோ. பிரான்ஹாமே... எனலாம். இப்பொழுது, ஒரு நிமிடம் பொறுங்கள். ஒரு காலத்தில் தேவன், நான் சங்காரத் தூதனை தேசத்திற்கு அனுப்பு வேன். வாசலில் இரத்தம் பூசப்படாத ஒவ்வொரு குடும்பத்திலுள்ள தலைச்சன் பிள்ளையை நான் கொன்று போடுவேன் என்றார், பஸ்காவின் அந்த மகத்தான இரவின் போது. அங்கு வாக்குத்தத்தம் பெற்றிருந்த இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்கு சென்று கொண்டிருந்தனர். அவர்கள்... அது பஸ்காவின் இரவு. சங்காரத் தூதன் தேசத்தில் இருக்கிறான். தெருவிலிருந்து கூச்சல் வருவதை நாம் கேட்கிறோம். நாம் எட்டிப்பார்க்கும் போது இரண்டு பெரிய

கறுப்பு செட்டைகள் தெருவின் வழியாக செட்டையடித்து செல்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் பயந்தார்கள் என்றா நினைக் கிறீர்கள்? இல்லை, ஐயா! மரணம் வாசலை அடைந்தது. சிறுவன் சன்னலின் வழியாக எட்டிப் பார்த்தான். அவன் தான் குடும்பத்தின் தலைச்சன் பிள்ளை. அவன் அந்த பெரிய கறுப்பு தூதனைக் காண்கி றான். அவன், அப்பா, உங்களுக்கு என் மேல் அன்பு உண்டா? நிச்சயம் மகனே, நான் உன்னை நேசிக்கிறேன். “அப்பா, நான் உங்கள் தலைச்சன் பிள்ளை “ஆம், மகனே, நீ தலைச்சன் பிள்ளைதான். ''அங்கே பாருங்கள், அப்பா, அந்த தூதன் அந்த சிறுவனைக் கொன்றுவிட்டான். அந்த பையனை எனக்கு நன்றாகத் தெரியும். அவனுடன் நான் விளையாடியிருக்கிறேன். ஓ, அப்பா, இதோ தூதன் வீட்டை நோக்கி வருகிறான். “ஆனால் மகனே, நிலைக்

காலைப் பார்த்தாயா? அல்லேலூயா! “அப்பா, தூதன் என்னைகொன்று விடுவானா? “இல்லை, மகனே. அவன் உன்னைக் கொல்ல முடியாது. “ஏன்?” ''நான் இரத்தத்தைக் காணும்போது, உங்களைக் கடந்து செல்வேன்'' என்பது அவருடைய வாக்குத்தத்தம். நீ போய் விளையாட்டுச் சாமான்களை எடுத்துக் கொண்டு விளையாடு, மகனே. கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. நாம் தேவனுடைய புகலிடத்தில் இருக்கிறோம். நீராவியை வெளியேற்று.''

48. இஸ்ரவேல் ஜனங்கள் அமைதியாக உட்கார்ந்து கொண்டு வேதத்தைப் படிக்க முடிந்தது. மற்றவர்களோ கூச்சலிட்டு நீராவியை அதிகரித்துக் கொண்டிருந்தனர். இஸ்ரவேல் ஜனங்கள் அமைதியான நிலையில் இருந்தனர். ஏன்? மரணம்

வாசலில் காத்திருந்த போதும், அது எத்தகைய வித்தியாசத்தை உண்டாக்கினது! அது அவர்களை சேதப்படுத்தாது. எனவே, மரணம் நமது வாசலில் காத்திருக்கும் போது (தேவனுக்கு மகிமை!), தேவனுக் குத் தேவையான இரத்தம் என் இருதய மாகிய நிலைக்காலில் பூசப்பட்டுள்ள வரைக்கும், அதனால் என்ன வித்தியாசம்? அது உங்களைத் தொல்லைப்படுத்தாது. நாளை நீங்கள் இறந்துவிடுவீர்கள் என்று மருத்துவர் கூறிவிட்டால், அதனால் என்ன வித்தியாசம்? இரத்தம் நிலைக் காலில் உள்ளதே. நீங்கள் எப்படியும் இறக்க வேண்டும். ஆனால், அந்த இரத்தம் பூசப்பட்டிருக்கும் போது, எனக்கு ஒரு உயிர்த்தெழுதல் வரப்போகிறது. ஆமென்!


நமக்கு ஒரு மறைவிடம் இருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 56-11-25 M பயன்படுத்தப்பட்ட ஓர் சால்வை

ஆதியாகமத்தில் விதை ஊன்றப் பட்டன, இந்த 6000 வருடங்களில் அறுவடைக்காக முதிர்வடைந்திருக்கிறது; இப்பொழுது அந்த விதை தாமே ஒரு விதையாக ஆகியிருக்கிறது. அது பூ பூத்து, அதிலிருந்து கனிக்கு செல்கிறது. இப்பொ ழுது ஒன்றுகூட்டப்படும் நேரமாக உள்ளது, அறுப்பின் நேரம், எல்லா மகத்தான காரியங்களும் தொடங்கப்பட்டன. ஆதியா கமத்தில் ஆரம்பிக்கப்பட்ட அந்த உண்மை யான சபையானது கனிகொடுக்கும் நேரத்துக்கு வந்திருக்கிறது, ஆவியின் கனிகள். உலகத்திலுள்ள மனிதனின் எல்லா ஆட்சி முறைகளும் முடியப்போகும் தருணத்தில் நாம் இருக்கிறோம்.

மேலும் நாம்... எவருக்கும், அல்லது நாம் எப்போதும் வாழ்ந்ததிலேயே எந்த காலத்தைக் காட்டிலும் இந்த நேரமானது மகத்தான நேரமாக உள்ளது. இது அசைக் கப்படும் ஒரு நேரமாகும். பாவிகளுக்கு இது ஒரு கலக்கத்தின் நேரமாகும். ஆனால் இது கிறிஸ்தவர்களுக்கோ ஒரு அற்புத மான நேரமாகும், ஏனெனில் நம்முடைய கடைசி கொஞ்சம் முயற்சிகளைச் சேர்த்து மூட்டை கட்டி அல்லது ஒன்றாக சேர்த்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று கர்த்தரை சந்திக்கிறோம் என்பதை நாம் அறிந்திருக் கிறோம். இப்பொழுது, நீங்கள் சுற்றிலும் நோக்கிப் பார்க்கும் போது, இன்றைய ஜனங்கள் தேசம் எதிர்கொண்டுள்ள பெரும் கலக்கத்துடனும், வியாகுலத்தோ டும் இருப்பதைப் பாருங்கள்,...

9. ஒரு சில இரவுகளுக்கு முன்பு, நான் யாரோ ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்

தேன். அவர் அரசாங்கத்தின் பிரதிநிதியாய் வேலை பார்க்கும், இங்கே கவனித்துக் கொண்டிருக்கும் அவர்களில் ஒருவராக இருந்தார், அவர்கள், ‘சகோதரன் பிரன் ஹாமே, அந்த குண்டானது தாக்கும் போது, தரையில் ஜன்னலிலிருந்து விலகி, இனி மேல் படுங்கள் என்றோ அல்லது கட்டிடத் தின் அடித்தளத்திற்குப் போக வேண்டாம் என்றோ ஜனங்களுக்கு ஆலோசனை கூற வேண்டாம் என்று அரசாங்கத்தால் நாங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளோம், ஏனெனில் இந்த புதிய குண்டானது மாஸ்கோவி லிருந்து லூயிவில்லிலுள்ள நாலாவது தெருவுக்கு ரேடியோ மூலமாக செலுத் தப்பட்டு சரியாக அத்தெருவைத் தாக்க முடியும்; இலக்கைத் தாக்கும் திறன் கொண்ட அது செலுத்தப்பட்டு, அது வெடித்து, அநேக ஆயிரக்கணக்கான, அநேக ஆயிரக்கணக்கான பேரின் உயிரை

வாங்க முடியும், நட்சத்திரங்கள் மற்றும் ராடாரினால் அது செலுத்தப்பட்டு, ரஷ்யா வுலுள்ள மாஸ்கோவிலிருந்து லூயிவில்லி லுள்ள நாலாவது தெருவின் மேல் அது மிகவும் சரியாக வந்து விழும். அது தாக்கும் போது, அவ்வாறு செய்ய வேண் டாம்...?... விமானத்தையோ அல்லது எதையுமே பயன்படுத்த வேண்டாம், அது இங்கிருந்து சுடப்பட்டு, சரியாக அங்கே சென்று சேரும். அது பூமியில் ஒரு பெரிய துளையை உண்டாக்கும்... 175 அடி ஆழமும் 15 சதுர மைல் பரப்பளவும் கொண்ட ஒரு பள்ளத்தை உண்டாக்கும்: பதினைந்து சதுர மைல்கள்' என்றனர்.

அந்த சமயம் வரும்போது, செய்ய வேண்டிய ஒரே காரியம் என்னவெனில், விமானத்தின் மேல் மாடியில் (flight upstairs) செல்வதைத் தவிர வேறொன்று மில்லை. சற்று சிந்தித்துப் பாருங்கள்,

அவர்கள் விரும்பினால், ஒரே நேரத்தில் அவைகளில் 50 குண்டுகளையோ அல்லது 100 குண்டுகளையோ வீச முடியும். அங்கிருந்து இங்கே அந்த குண்டுகளை வீசி, எல்லாவற்றையும் முழுவதுமாக அழிக்க ஆகும் நேரம் 60 அல்லது 80 நிமிடங்கள், அல்லது சரியாகச் சொன் னால், 60 அல்லது 80 நொடிகள் தான் என்று நம்புகிறேன். லூயிவில்லுக்கும் ஹென்றிவில்லுக்கும் இடையே மற்றும் லூயிவில்லுக்கும் பார்ட்ஸ்டௌனுக்கும் இடையே அல்லது அங்கே, பூமியில் பள்ளம் ஏற்பட்டு, அதில் ஒரு குவியல் தூசியைத் தவிர வேறொன்றும் விடப் பட்டிருக்காது; அவ்வளவு தான் விடப் பட்டிருக்கும், அந்த பிரதேசத்தின் அருகி லும் அதற்கு அப்பாலும் மைல் கணக்காக, மைல்கள் கணக்காக, மைல்கள்கணக்காக அதற்கப்பாலும் எல்லாம் எரிந்து போய்

விடும். அங்கே ஒன்று இடிந்து விழும் போது, அதற்கு மேல் வேறொன்று அங்கே எங்கேயோ அதை சந்திக்கத்தக்கதாக இடிந்து விழும்.

10. நமக்கு ஒரு மறைவிடம் இருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ‘கர்த்தருடைய நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்.’ எத்தனை குண்டுகளோ அல்லது மற்ற எதுவுமோ போடப்பட்டாலும் கவலையில்லை, நாம் அங்கே பாதுகாப்பாக இருக்கிறோம். எனவே இந்த மறைவிடம் அல்லது இந்த புகலிடமானது, இந்த உலகத்திற்கோ பாவிகளுக்கோ கிடையாது. இது ஒரு அசைக்கும் நேரமாக உள்ளது. நான் ஒரு கிறிஸ்தவனாக இல்லாதிருந்தால், எந்த நேரத்தில் எது சம்பவிக்குமோ என்று எண்ணிக்கொண்டு பித்து பிடித்தவனாய் இருந்திருப்பேன் என்று நம்புகிறேன்.

வீடு முழுவதும் சிறு பிள்ளைகளும் மற்றும் ஒவ்வொன்றும் இருக்கையில், என்ன செய்ய வேண்டுமென்று எனக்கு தெரி யாது. ஆனால் நான் என்னுடைய வீட்டில் நின்று, எந்த குண்டுகளும் வேறு எதுவும் தொட முடியாத ஒரு மறைவிடத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்த முடிவதற் காக மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கர்த்த ராகிய இயேசுவின் பாதுகாக்கும் செட்டை களின் கீழே. ‘பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.’ பாருங்கள்? அதுவே நம்முடைய பாதுகாப்பு.

ஜீவியத்தின் எல்லா பாவங்களும், போராட்டங்களும், சோதனைகளும் சீக்கிர மாய் போய் விடும் என்று அறியும்படி யான இந்நேரம் என்ன ஒரு மகத்தானதும் மகிமையானதுமான நேரமாக உள்ளது!

இந்நாட்களில் ஒன்றில் எல்லாம் முடிந்து விடும். நாம் கர்த்தருடன் இருக்கும்படி வீட்டிற்கு போய் விடுவோம். இப்பொழுது, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் நம்மால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு பேரை இந்த மகத்தான கோட்டைக்குள் கொண்டுவரும்படியான நேரம் தான் மிச்சமுள்ளது.



## என்ன சம்பவித்தாலும், உலகம் என்ன கூறினாலும் அது ஒரு காரியமல்ல. உன்னுடைய பாதுகாப்பு இஸ்ரவேலரின் தேவனாகிய கர்த்தரே. அது போதுமானது ஐயா!



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: மூவகை விசுவாசிகள், நவம்பர் 24, 1963

79. தாவீது கோலியாத்தைப் பார்த்து பயப்படவில்லை. ஏனெனில் கோலியாத் விருத்தசேதனம் இல்லாதவனும், அவிசு வாசியுமாயிருந்தான். அவன் அங்கு வந்து தன் தேவர்களின் நாமத்தினாலே தூஷித் தான்.

80. இந்த கோலியாத் தாவீதைப் பார்க்கிலும் பன்மடங்கு பெரியவனாயும், பலசாலியுமாய் இருந்தான். அவனுடைய கைகளின் விரல்கள் பதினான்கு அங்குலம் நீளமாயிருந்தன. அவன் ஒரு மகத்தான போர்வீரனாய் இருந்தான் என்பதை கவனித்தீர்களா? ஒருவேளை அவன் தன் மேல் அணிந்திருந்த கவசங்களின் நிறை

யானது 300 பவுண்டுக்கும் அதிகமான எடையுள்ளதாயும், அவன் அணிந்திருந்த தலைச்சீரா ஒன்றரை அங்குல கனமுள்ள தாயும் இருந்திருக்கக்கூடும். அவனுடைய ஈட்டித்தாங்கு நெசவுக்காரரின் படை மரத்தின் கனதியும், அதின் நீளம் இருபது அடியாக இருந்திருக்கும் எனக் கூறுகி றார்கள். இவ்விதமான அவன் ஒரு இராட்சதனாக அங்கு நடந்து வந்தான். அத்தகைய மனிதன், நின்ற வண்ண மாகவே பன்னிரண்டு மனிதர்களை ஒரே சமயத்தில் தூக்கி வீசியெறிய முடியும். எத்தகைய ஓர் எதிர்ப்பு என்று கவனி யுங்கள்.

81. அவன் அங்கு நின்று கொண்டு காரியங்கள் பலவீனமடைந்தது போல் தோன்றின அந்தநேரத்தில்... தன்னைக் குறித்து பெருமையடித்துக்கொண்டிருந்

தான். “நாம் இரத்தம் அதிகம் சிந்த வேண்டாம், நாம் ஒருவரோடு ஒருவர் யுத்தம் பண்ண ஒருவனை விடுங்கள். அவன் என்னோடே யுத்தம் பண்ணவும் என்னைக் கொல்லவும் சமர்த்தனானால், நாங்கள் உங்களுக்கு வேலைக்காரராய் இருப்போம்; நான் அவனை ஜெயித்து அவனைக் கொல்வேனானால், நீங்கள் எங்களுக்கு வேலைக்காரராயிருந்து, எங்களைச் சேவிக்க வேண்டும்'' என்று அந்த கோலியாத் கூறினான். பிசாசானவன் உங்கள் பலவீனத்தில் உங்களைப் பிடித்து பரிகாசம் செய்ய விரும்பும்போது, அங்கு நடக்கும் காரியம் என்னவென்பதைப் பார்த்தீர்களா? ஆனால் பிசாசு இங்கு தவறான மனிதனை சந்தித்து விட்டான். தேசத்திலேயே மிகவும் சிறியவனாயும், சிவந்த மேனியுடையவனாயும், சரிந்த

தோள்களையுடையவனுமாயிருந்த தாவீதை பிசாசு சந்தித்தான்.

82. ''ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம்?'' என்று தாவீது கூறினான். அந்த பெலிஸ்தனுடைய அறைகூவல்! தாவீதை அதிர்ச்சிக்குள்ளாக்கிற்று. ஏன்? ஏன்? ஏனெனில் அவன் ஒரு விசுவாசியாயிருந்தான். அங்கிருந்த மற்றவர்களெல்லாரும் பாவனை விசுவாசிகளாயிருந்தனர். பாருங்கள்? அவன் ஒரு உண்மையான விசுவாசியாயிருந்தான். "நீங்கள் பயந்தீர்களென்றால், நான் சென்று அவனோடு யுத்தம் செய்வேன்'' என்று தாவீது கூறினான். பாருங்கள்? ஒரு சிறு பையனாக இருந்த தாவீதுக்காக வைக்கப்பட்டிருந்த சவால் எத்தகையதாயிருந்தது! அவன் ஒரு

விசுவாசியாயிருந்தபடியால், தேவன் எதை செய்வார் என்பதை அறிந்தவனாக அதையே சரியாக செய்தான்.

83. விருத்தசேதனமில்லாத அந்த பெலிஸ்தன் தன்னுடைய தேவர்களின் நாமத்தினால் தாவீதை சபித்து, “நான் ஒரு நாயா?'' என்று கேட்டான். தாவீது அங்கே ஒரு சிறிய குள்ள மனிதனாக நடந்து வந்தான். அந்த பெலிஸ்தன் மேலும் தொடர்ந்து, “என்னுடைய ஈட்டியின் முனையில் உன்னைக் குத்தியெடுத்து, உன் மாமிசத்தை ஆகாயத்துப் பறவைகள் திண்பதற்காக மரத்தின் மேலே தொங்க வைப்பேன் வா!” என்று கூறினான். ஓ! எத்தகைய ஒரு பயங்கரமான மனிதன் அவன்!

84. அதற்கு தாவீது, “நீ பட்டயத் தோடும், ஈட்டியோடும் கேடகத்தோடும்,

பெலிஸ்தர்களின் தேவனின் நாமத்தினா லும் என்னிடத்தில் வருகிறாய். ஆனால் நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலருடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைக ளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத் தில் வருகிறேன்!'' என்றான்.

85. அவன்தான் விசுவாசி, ஐயா. அதுதான் அவனுடைய கோட்டையும் கவசமும் பாதுகாப்புமாகும்! ஆமென்! சபையின் பாதுகாப்பும் அதுவாகத்தான் இருக்கவேண்டும். எந்த ஒரு விசுவாசிக் கும் அதுவே பாதுகாப்பாகும். என்ன சம்பவித்தாலும், உலகம் என்ன கூறினா லும் அது ஒரு காரியமல்ல. உன்னுடைய பாதுகாப்பு இஸ்ரவேலரின் தேவனாகிய கர்த்தரே. அது போதுமானது ஐயா! “இயேசு கிறிஸ்துவின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடி சுகமா

யிருப்பான்'' இயேசு கிறிஸ்துவே நமது பாதுகாப்பாகும்.

86. அன்று அந்த போர்க்களத்தில் நடந்த சம்பவத்தை நாமறிந்திருக்கிறோம். கோலியாத்தின் நெற்றியில் ஒரு சிறு பாகம் மட்டுமே தாவீது தன் கவண் கல்லினால் தாக்கத்தக்கதாக திறந்திருந்தது. அந்த இராட்சதனிடம் அதிக சமீபமாக தாவீது நெருங்கு முன்பே, அவனைக் கொல்லத் தக்கதான பாகத்திற்கு கவண் கல்லை தேவன் வழி நடத்தினார். பின்பு தாவீது அவனைக் கொன்றான். தேவனே அதைச் செய்தார். தாவீது ஒரு விசுவாசியா யிருந்தான். என்று நாம் காண்கிறோம்.



# அவிசுவாசத்தில் எந்த ஒரு பலனும் இல்லை

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-0128M அவிசுவாசம் தேவனை தடை செய்யாது

47. நீங்கள் இரண்டு அடிப்படைக் கூறுகளால் கட்டுப்படுத்தப்படுகிறீர்கள்: ஒன்று நீங்கள் விசுவாசிக்க வேண்டும் அல்லது நீங்கள் விசுவாசிக்காமலிருக்க வேண்டும். இப்பொழுது அவிசுவாசத்தை எடுத்து, அது என்ன செய்கிறது என்று பார்க்கலாம். அது கவலையை மட்டுமே உண்டுபண்ணி, தாங்கொண்ணாத் துன்ப நிலையைக் கொண்டு வந்து; மேலும், அது உங்களுக்கு எந்த ஒரு உதவியையும் செய்யாது, அவிசுவாசத்தினால் எந்த ஒரு பிரயோஜனமும் இல்லை. நாளை காலை யில் சூரிய உதயத்தின்போது நீங்கள் சுடப்படப் போவதாக வைத்துக் கொள் வோம். மற்றும் அதைக்குறித்து கவலைப்

படுவதினால் அது உங்களுக்கு எந்த ஒரு உதவியையும் செய்யாது. ஒரு துளி கூட உதவி செய்யாது. அது உங்கள் மேல் இன்னும் மோசமானதைத்தான் கொண்டு வரும். எனவே நீங்கள் அதைச் செய்யக் கூடாது. அப்படி செய்வது நல்லதல்ல. “சரி”, நீங்கள் கூறலாம், “விசுவாசம் என்ன செய்யப் போகிறது?” “தேவனுடைய வார்த்தை என்ன செய்யப் போகிறது?”. அது விசுவாசத்தை சிருஷ்டிக்கிறது, “சரி, நீங்கள் நாளை காலையில் சுடப்படப் போவதாக இருக்கும் பட்சத்தில், விசுவா சம் என்ன செய்யும்?” அது என்னை விடுவிக்கும், அவ்விதமாக அநேகமுறை எனக்கு அது செய்திருக்கிறது, நிச்சயமாக, பாருங்கள். அவிசுவாசத்தில் எந்த ஒரு பலனும் இல்லை. இருக்கின்ற எல்லா பலனும் விசுவாசத்தில் தான் இருக்கிறது, தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து,

தேவனை அவருடைய வார்த்தையின்படி எடுத்துக் கொள்வதில்தான்.

48. இப்பொழுது, இங்கே கொஞ்ச நாட்களுக்கு முன், அது அவர்கள் சுதந்திர தேவி சிலையைக் கண்டனம் செய்வதற்கு முன், அது ஐக்கிய அமெரிக்க தேசத்திற்கு பிரான்ஸிலிருந்து வந்த ஒரு வெகுமதி யாக... இப்பொழுது, அது கண்டனத்துக் குள்ளாகி இருக்கிறது, எனவே அதற்குள் ளாக மேல் ஏறி செல்லமுடியாது என்று எனக்குப் புரியும். ஒருமுறை அதற்குள் ளாகப் போகிற சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. அந்த சிலையின் மேற்பாக மான கை பாகத்திற்குள் சென்றேன். அதன் பிறகு நானும் வழிகாட்டியும் அங்கே இருந்த ஒரு சிறிய இடத்திற்குச் சென் றோம், அங்கே ஒரு ஜன்னல் இருந்தது, அங்கே நான் வெளியே தொலைவாகப் பார்த்தபடி, என்னுடைய அத்தை பையன்

அங்கே இராணுவத்தில் முழுவதும் அடிப்பட்டு மற்றும் சுடப்பட்டவனாய் பின்னர் அங்கிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்ததை நினைவு கூர்ந்தேன். அவன், எனவே எங்கள் கப்பல் கரையை நோக்கி வந்தபோது, பில்லி, நாங்கள் தொலை தூரத்தில் நம் தேசத்தை கண்டவுடன், அவர்கள் (நாங்கள்) சந்தோஷத்தில் சக்கர நாற்காலிகளை உருட்டிக் கொண்டும், தூக்குப்படுக்கையின் (stretcher cases) பெட்டிகளை மேலே உயர்த்தவும் செய் தோம், என்றான். அது முதலாம் உலகப் போர் நடந்தபோது நிகழ்ந்தது. அது, நியூயார்க் பட்டிணத்தில் பெரிய மிகப் பெரிய கட்டிடங்கள், வருவதற்கு முன்ன தாக நடந்தது, எனவே அந்த சுதந்திர தேவி சிலை கடலிலிருந்து மேல் எழும்புவதை அவர்களால் காண முடிந்தது. அப்பொழுது அவர்கள், “என் தேசமே, உம்மண்டைக்கு,

இனிய சுதந்திர தேசமே...” என்று பாட துவங்கினார்கள். வெட்டுக் காயம்பட்டு, மற்றும் துப்பாக்கியால் சுடப்பட்டும், முடமான அந்த தேர்ச்சி பெற்ற யுத்தத்தை முடித்து திரும்பும் படை வீரர்கள், அந்த சுதந்திர தேவி சிலை அவ்விதமாக கடலி லிருந்து மேல் எழும்புவதை கண்டபோது, அவர்கள் உடனடியாகக் கீழே பணிந்து, கூச்சலிடத் துவங்கினார்கள் என்று கூறுகி றார்கள். ஏன்? ஏனெனில் அதன் பின்னாக அவர்களுடைய தாயார் காத்துக் கொண் டிருந்தார்கள், காதலிகள் காத்துக் கொண் டிருந்தனர், மனைவிமார்கள் காத்துக் கொண்டிருந்தனர், குழந்தைகள் காத்துக் கொண்டிருந்தனர். "ஒரு இராணுவ வீரனுக்கு, யுத்தக்களத்திலிருந்து வெட்டுக் காயம்பட்டு, திரும்பும் வீரனுக்கு அது அவ்விதமாக செய்யுமானால்; அங்கே தொங்கிக் கொண்டிருக்கும் அந்த பழைய

கோர சிலுவையைக் காணும் நமக்கு அது எப்படியிருக்கும்?“ என்று நான் நினைத்தேன். ஓ, எனக்கு அந்த பழைய சீயோன் கப்பலின் மேல் தளத்தில் நின்று என் கைகளை உயர்த்தி, ''ஆச்சரியமான கிருபை, அதின் சத்தம் எவ்வளவு இனிமையானது'' அல்லது ”ஓ, நான் எவ்வளவாய் இயேசுவை நேசிக்கிறேன்“ என்று கூற விரும்புகிறேன்.

49. அவ்விதமாக அந்த ஜன்னல் வழியாக நான் பார்த்துக் கொண்டு, சிந்தித்துக் கொண்டிருந்தபோது, அங்கே ஓரமாக ஒரு கூட்ட சிறிய சிட்டுக் குருவிகள் மரித்துக் கிடப்பதை கவனித்தேன். அவைகள் அப்பொழுது தான் கொல்லப்பட்டது போல காணப்பட்டது. எனவே நான் அந்த வழிகாட்டியினிடத்தில் கேட்டேன், அந்த சிட்டுக் குருவிகளை நீங்கள் விஷம் வைத்து கொன்றீர்களா?“

என்று கேட்டேன். அவன், “இல்லை, இல்லை, நாங்கள் அதற்கு விஷம் வைக்க வில்லை'', என்றான். நான், “அப்படியா னால் ஏன் இவைகள் இங்கே இந்த ஜன்னலண்டை மரித்துக் கிடக்கின்றன?”, என்றேன். அவன், “அவைகள் தங்க ளுடைய மூளை வெளியேறும் அளவுக்கு ஜன்னலில் மோதி இறந்து கிடக்கின்றன”, என்றான். எனவே நான், “ஏன் அவ் விதமாக நடந்தது,” என்றேன். அவன், “கடந்த இரவுக்கு முந்தின இரவில் ஒரு புயல் வீசியது. அப்பொழுது புயல் வீசிக்கொண்டும், காற்று சுழன்று அடித்துக் கொண்டும், மரங்கள் இப்படியும் அப்படி யுமாக அசைந்து கொண்டும், மின்னல்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தபோது, இந்த சிறிய பறவைகள் தஞ்சம் அடையும்படிக்கு இந்த (கோபுர) வழிகாட்டி விளக்கண்டை வந்தது”, என்றான். அவன் தொடர்ந்து,

“ஆனால் அவைகள் இந்த வெளிச்சத்தைப் பயன்படுத்தி பாதுகாப்பைக் கண்டுபிடித் திருக்குமானால், அவைகள் பாதுகாப்பாக இருந்திருக்கும். ஆனால் அவைகள் எப்படி முயற்சி செய்தது என்றால் அவைகள் தொடர்ந்து பறந்தபடி, அந்த விளக்கை மோதி அடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அது அவைகளைக் குருடாக்கித்தான் போட்டது. அதினிமித்தம் அவைகள் தங்க ளுடைய சிறிய மூளைகள் சிதறடிக்கப் பட்டு, இங்கே மரித்துக் கிடக்கின்றன.

50. அப்பொழுது உடனே நான் எதையும் கூறவில்லை. ஆனால், நான், ''அது எவ்வளவு உண்மையானது என்று நினைத்தேன். அவிசுவாசிகள், இந்த வழிகாட்டி (கோபுர) விளக்கண்டை (தேவனுடைய வார்த்தையே வெளிச்சமாய் இருக்கிறது) வந்து அந்த வழிகாட்டி விளக்கை எடுத்துக் கொண்டு அதினோடு

கூட பாதுகாப்பாக கிறிஸ்துவுக்குள் வருவ தற்குப் பதிலாக, தங்களுடைய மூளை களைச் சிதறடிக்கும்படி செய்கிறார்கள், எப்படியெனில் அந்த விளக்கானது முற்றிலும் அணைத்துப் போட முடியாத தாய் இருக்கும்போது, அதை அணைத்துப் போட முயன்று பாவத்திலும், இழிவான திலும் மரித்துப் போகிறார்கள். ஆனால் அந்த வெளிச்சத்தையோ இந்த உலகத்தி லிருந்து முற்றிலும் அணைத்துப் போடும் படிக்கு எவ்வளவு தான் நாத்திகவாதிகள் எழும்பினாலும், எவ்வளவு தான் பாதா ளத்திலிருந்து பிசாசுகள் வந்தாலும், அது கூடாததாயிருக்கிறது''. “நானே உலகத்தின் வெளிச்சமாயிருக்கிறேன்”, அவர்களால் அதை ஒருக்காலும் அணைத்துப்போட முடியாது. எனவே செய்வதற்கென்று ஒரே ஒரு காரியம் தான் இருக்கிறது. அது உன்னுடைய பாதையில் பிரகாசிக்கும்

போது, அதைப் பின்பற்று. “கர்த்தருடைய நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடி, சுகமாயிருப்பான். நீங்கள் என்னிலும் (கோபுரத்திற்குள்) என்னுடைய வார்த்தை கள் உங்களிலும் நிலைத்திருந்தால், அப்பொழுது நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்குக் கொடுக்கப் படும்”.



# நீதிமொழிகள் 18:10

10. கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்.




கர்த்தரின் நாமம் பலத்த
துருகம்
வியாக்கியானம்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து